பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.474 **நாள்:14.09.2026**

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன்,இ.ஆ.ப., அவர்கள், அம்பத்தூர் மண்டலம், அத்திப்பட்டு வானகரம் பிரதான சாலையில் ரூபாய் 2.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நாய்கள் கருத்தடை மையம் மற்றும் மருத்துவமனையினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று (14.09.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன்,இ.ஆ.ப., அவர்கள், அம்பத்தூர் மண்டலம், அத்திப்பட்டு வானகரம் பிரதான சாலையில் ரூபாய் 2.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நாய்கள் கருத்தடை மையம் மற்றும் மருத்துவமனையினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த மருத்துவணை தரைத்தளம் மற்றும் முதல் தளம் என 492.55 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் அறுவை அரங்கம், மருத்துவர்கள் கைகளைக் கழுவி சுத்தப்படுத்தும் அறை, தயார்ப்படுத்தும் அறை, ஆய்வக அறை, மருத்துவர்கள் அறை, மருந்துகள் அறை, பொருட்கள் வைக்கும் அறை, சமையல் அறை, கழிவறை வசதிகள் செல்லப்பிராணிகளுக்கான அறை உள்ளிட்ட வசதிகளும் மின் தூக்கி, படிக்கட்டு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்கள் வைக்கும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

அறுவை சிகிச்சைக்கு முன்னதாக 50 நாய்கள் வைப்பதற்கான கூண்டுகளும், அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் 150 நாய்கள் வைப்பதற்கான கூண்டுகளும் வைக்கப்படுகின்றன. இதன் பணிகளைப் பார்வையிட்ட ஆணையர் அவர்கள், இந்த மையம் பயன்பாட்டிற்கு வந்த பின்னர் நாளொன்றுக்கு சராசரியாக 25 நாய்களுக்கு குறைவில்லாமல் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தும் திட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்த நாய்கள் கருத்தடை மையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும்

மைக்ரோசிப் பொருத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்ட பின்னர், நாய்கள் மீண்டும் அவை பிடிக்கப்பட்ட அதே இடத்திலேயே விடுவிக்கப்படுகின்றன.

கடந்த 2024 ஆம் ஆண்டில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் தெருநாய்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, மொத்தம் 1,80,157 தெருநாய்கள் இருப்பதாகவும், அவற்றில் சுமார் 1,28,000 தெருநாய்கள் கருத்தடை செய்யப்படாதவை எனவும் கண்டறியப்பட்டது.

கடந்த 2024 ஆம் ஆண்டு 14,678 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும், கடந்த 2025 ஆம் ஆண்டு 16,611 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டு 2026 - இல் (13.09.2026 வரை) 34,142 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றில் 30,469 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபிஸ் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது, 13 நாய்கள் கருத்தடை மையங்கள் கீழ்க்காணும் செயல்பட்டு வருகின்றன.

வ.எண்	நாய் இனக்கட்டுபாட்டு மையங்கள்
1.	புளியந்தோப்பு
2.	லாயிட்ஸ் காலனி
3.	கண்ணம்மாபேட்டை
4.	மீனம்பாக்கம்
5.	சோழிங்கநல்லூர்
6.	செட்டிமேடு I
7.	செட்டிமேடு II
8.	திருவொற்றியூர்
9.	மாதவரம்
10.	கண்ணப்பர் திடல்
11.	பெருங்குடி
12.	நந்தம்பாக்கம்
13.	பள்ளிக்கரணை

மேலும், 2 புதிய நாய்கள் கருத்தடை மையங்கள் மற்றும் செல்லப்பிராணி மருத்துவமனைகள் கட்டப்பட்டு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

வ.எண்	மண்டலம்	நாய் இனக்கட்டுபாட்டு மையங்கள் அமையவிருக்கும் இடங்கள்
1.	அம்பத்தூர்	அத்திப்பட்டு, கோட்டம் -86
2.	சோழிங்கநல்லூர்	பயோ சி.என்.ஜி. பிளான்ட், கோட்டம் -194

பெருநகர சென்னை மாநகராட்சி, கால்நடை மருத்துவத்துறையின் சார்பில் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் மாபெரும் அளவிலான முகாம் 11.08.2026 அன்று தொடங்கப்பட்டு இதுவரை 75,208 தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் மண்டலத்தில் 12,313 தெருநாய்களுக்கும், மணலி மண்டலத்தில் 7200 தெருநாய்களுக்கும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் 12,477 தெருநாய்களுக்கும் இராயபுரம் மண்டலத்தில் 8,598 தெருநாய்களுக்கும் ரேபிஸ் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தற்போது மாதவரம் மண்டலத்தில் 12,317 தெருநாய்களுக்கும், அம்பத்தூர் மண்டலத்தில் 16,802 தெருநாய்களுக்கும் மற்றும் அண்ணா நகர் மண்டலத்தில் 5500 தெருநாய்களுக்கும் ஆகிய மண்டலங்களில் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்பட்டு வருகிறது.

இச்சிறப்பு முகாம் மாதவரம் மண்டலத்தில் மேலும் 4 நாட்களும் அம்பத்தூர் மண்டலத்தில் மேலும் 7 நாட்களும் மற்றும் அண்ணா நகர் மண்டலத்தில் மேலும் 7 நாட்களும் நடத்தப்படவுள்ளது.

இம்முகாம் 11.08.2026 அன்று தொடங்கப்பட்டு இதுவரை 31 வேலை நாட்கள் நிறைவுற்று மேலும் 44 வேலை நாட்களுக்குள் மண்டலங்கள் 6,9,10,11,12,13,14 மற்றும் 15 ஆகியவற்றில் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் முகாம் நடத்தப்படவுள்ளது.

இந்த ஆய்வின்போது மண்டல அலுவலர் திரு.தணிகைவேல் , மண்டல கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர்.ஷண்மதி உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.